# கிட்டண்ணா ஒரு அற்புதமான போராளி

— ச.பொட்டு



கிட்டண்ணை, தலைவரின் கையில் வளர்ந்த, தலைவரின் கையால் ஊட்டி வளர்த்த குழந்தை. அற்புதமான கலைஞன். உள்ளத்தைத் தொடும் எழுத்தாளன். நல்ல வாசகன். புலியாய் செயல்படும் போர் வீரன். தானை வழிநடத்தும் தளபதி. மக்களை வசப்படுத்தும் தலைவன். பிரமிக்க வைக்கும் மனிதன். அற்புதமான போராளி.

கிட்டண்ணையின் எண்ண ஓட்டங்களுக்கு ஈடு கொடுப்பது கடினம். இயக்கத்தின் எந்த ஒரு பணியாலும் புதிய புதிய எண்ணங்களை வெளிப்படுத்துவார். ஒவ்வொரு துறையும் எப்படி செயல்பட வேண்டும் என்பது பற்றி நீண்ட விரிவுரை நிகழ்த்தும் அளவிற்கு ஒவ்வொன்றைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து வைத்திருந்தார். வெறுமனே சிந்தித்துவிட்டு சொல்லிவிட்டு, எழுதிவிட்டு, அதனை மறந்து விடும் அல்லது கைவிடும் சாதாரண மனிதர் அல்ல கிட்டண்ணை. அவரது எல்லாச் சிந்தனைகளும் செயல்வடிவம் பெற வேண்டும் என்பதில் விடாப்பிடியானவர். கிட்டண்ணையின் நிர்வாகத்திறன் வித்தியாசமானது. பிரமிப்பூட்டுவது. தனது நிர்வாகத்திற்கு உட்பட்ட எந்தவொரு வேலைகளிலும் அவரது ஈடுபாடு, தலையீடு அளவுக்கு அதிகமாகவே இருக்கும். ஒவ்வொரு சிறிய விடயத்திலும் அவரது அதீத ஈடுபாடு, கண்காணிப்புக் காரணமாக எந்தவொரு அனுபவம் குறைந்த புதிய ஆட்களை வைத்தும் பெரிய வேலைத் திட்டங்களை அவரால் செய்ய முடிந்தது. தன்னுடன் பணியாற்றும், தன் கீழ் பணியாற்றும், எல்லோரையும் தன் வசப்படுத்தும், தான் நினைத்ததைச் செய்ய வைக்கும், திறன் அவரது தனித்துவமான வெற்றிகளுக்கு காரணமாக அமைந்தது.

ஒவ்வொரு வேலைகளையும் தானே திட்டமிட்டு நேரில் நின்று சரி பார்த்து அவற்றை ஒழுங்கமைப்பார். குட்டிசிறியின் 'மோட்டார்செல்'லுக்கு 'கரிமருந்து' அளவு பார்ப்பதிலிருந்து உள்ளி தட்டிப் போடுவதுவரை, எதுவாயிருந்தாலும் தானே நின்று, சரிபார்த்து ஆரம்பித்து வைத்தால்தான் அவருக்குத் திருப்தி. கிட்டண்ணையின் இராணுவ நிர்வாகத்திறன் உலகறிந்த விடயமாகும். தானே சண்டைக் களங்களில் முன்நின்று வழிநடத்துவது அவரது தனிப்பண்பு. 1987க்கு முன்னைய காலங்களில் யாழ்குடாநாட்டிற்குள் இராணுவ நடமாட்டத்தை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு அவர் பயன்படுத்தியது, தன் வசமிருந்த குறைந்த ஆயுதங்களையும் போராளிகளையும் மட்டுமல்ல. எதிரியை முட்டாளாக்கும் தந்திரோபாயத்தையும், தனது மனவலிமையையும் சேர்த்தே பயன்படுத்தினார். நெருக்கடியான நேரங்களில் அவர் காட்டும் மனவலிமை நம்ப முடியாததாயிருக்கும்.

அடையாளம் தெரியாத எதிரி அந்த வீரனுக்கு குறிவைத்த ஒரு மங்கலான மாலைப்பொழுது. வழமையாக எரிந்து கொண்டிருக்கும் மின்குமிழ் எரியவில்லை. அவரது 'கார்' நிறுத்தப்பட்டு கதவைத் திறந்து இறங்க முற்படும் வேளையிலேயே, அந்த நிழலான உருவத்தின் அசைவு. 'உள்ளுணர்வுகளை எச்சரிக்கின்றது. நிதானிப்பதற்கிடையில் வந்து விழுந்தது. கிரனேட்தான் என்று அவசரமாக வெளியேற முற்பட்ட வேளையிலேயே அது வெடித்து விட்டது. ஆசையாய் வைத்திருந்த சின்னக்காரின் 'ஸ்ரெயறிங்'கிற்குள் சிக்குப்பட்ட காலை இழுத்து எடுப்பதற்கிடையில் வெடித்து விட்டது. இதுவரை நிகழ்ந்தவைகள் சாதாரமானவை. எந்த ஒருவருக்கும் ஏற்படக்கூடியவைதான். ஆனால் அதன்பின்னர் அவர் நடந்து கொண்ட விதம் கிட்டண்ணைக்கே உரிய, தனித்துவம் வாய்ந்தது. முழங்காலுடன் துண்டாகிப் போய் துடித்துக் கொண்டிருந்தது அவரது கால். கிரனேட் வந்த திசையை நோக்கி ரிவோல்வர் மூன்று சூடுகளைச் சுட்டு ஓய்ந்தது. அவரது நினைவு மங்குகிறது. முழுமையாய் இருந்த ' ஜீன்ஸ்' பக்கத்தைக் கிழித்து துண்டாகிப் போன காலுக்குத் தானே கட்டுப் போட்டுக் கொண்டிருக்கையில் நினைவு மேலும் மங்குகிறது. உள்ளுணர்வு அவரை எச்சரித்தது. 'கிரனேட் எறிந்தவன் அருகில் வருவான். அவனைச் சுட வேண்டும்' என்ற உணர்வு அவரை 'முழுமையாக மயங்கிப் போய் விடாமல்' வைத்திருக்கிறது. 'கிரனைட்' எறிந்தவன் வருவான், வருவான் என திரும்பத் திரும்ப நினைத்து தன்னை முழுமையாக மயங்கிப் போய்விடாமல் வைத்திருந்தார். 'மூன்று சூடுகளைச் சுட்டு விட்டேன். ரிவோல்வரில் இன்னும் மூன்று ரவைகள்தான் இன்னும் மிச்சமாக உள்ளது' என்பது நினைவில் உறைக்கும்போது அவர் மயங்கிக் கொண்டிருந்தார்.

வைத்தியசாலை இவ்வளவு பக்கத்தில் இருந்தபடியால்தான் அவர் உயிர் தப்பினார் என்பதும், சத்திர சிகிச்சை அறைக்கு எடுத்துச் செல்லப்பட்ட கணத்தில் அவருடைய இதயத்துடிப்பு முற்றாகவே நின்று விட்டிருந்தது என்பதும், அவர் உயிர் தப்பியது மருத்துவ உலகின் புதினம் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விடயங்கள். அவர் காயப்பட்டு இரத்த வெள்ளத்தில் மயங்கிக் கிடந்த இடத்தில் தனது ரிவோல்வரை இறுகப் பற்றியபடி கிடந்தார் என்பதும், தனது ரிவோல்வரில் சுட்டுவிட்ட ரவைகளுக்குப் பதிலாக புதிய ரவைகளை மாற்றிப் போட்டிருந்தார் என்பதும், ஆனால் நினைவு தப்பிய நிலையில் அவர் வெற்றுக் கோதுகளுக்குப் பதிலாக மீதியாய் இருந்த நல்ல ரவைகளை வெளியே எடுத்துவிட்டு, அந்த இடத்திற்கே புதிய ரவைகளைப் போட்டிருந்தார் என்பதும் அநேகம் பேருக்குத் தெரியாத விடயங்கள். அன்று மட்டும் அல்ல, தனது போராட்ட வாழ்வின் ஒவ்வொரு நாட்களிலும், சந்தர்ப்பங்களிலும் அவர் தனது மன உறுதியை வெளிப்படுத்தினார். அதுவரை காலமும் யுத்த முனைகளிலும் தாயக பூமியின் எல்லாப் பரப்பிலும் கம்பீரமாய் உலாவி வந்த வேங்கை கால் உடைந்து கட்டிலில் வீழ்ந்த போதும் தன்னைச் சோர்வு சூழவிடவில்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் போராட்டத்திற்கான, போராளிகளுக்கான எந்த ஒரு வேலையையும் பொறுப்பேற்றுச் செய்ய கிட்டண்ணை தயங்கியதில்லை. தனக்கு ஒப்படைக்கப்படும் வேலை தனது தனிப்பட்ட நிலையினை எப்படித் தீர்மானிக்கும் என்பது பற்றி ஆராயாமல் இலட்சியத்திற்காக உழைத்தவர். தலைவர் அவர்களின் தனிப்பட்ட மெய்க்காவலராக இருந்தபோதிலும் சரி, தலைவர் அவர்களுக்கு அடுத்தடுத்தபடியான தலைவனாக வளர்ந்து இருந்த போதிலும் சரி அவர் இந்த நிலைப்பாட்டிலிருந்து மாறவே இல்லை.

1983ன் ஆரம்ப நாட்கள், எம்மில் பன்னிருவருக்கான பயிற்சி எல்லாமாக 25 பேர் வரையில் உள்ளடங்கிய காட்டுவாழ்க்கை. பஸ்சில் போய் கிளிநொச்சிக்கு அங்காலை எங்கேயோ இறங்கி இருளும் வரை றோட்டில் நின்று, 'ரக்ரரில்' ஏறி உள்ள காடெல்லாம் சுற்றிச் சுழன்று, நடுக்காட்டில் ஒரு சிறிய கொட்டிலுக்குப் போய்ச் சேர்ந்தோம். வடக்கு எது கிழக்கு எது என்று தெரியாமல் குழம்பிக் கொண்டு நின்று, அதிகாலை முடிந்து விடியும்போது பார்த்தால் சூரியன் மற்றப் பக்கத்தால் உதிக்கிறது. அநேகமாக உடையார் கட்டுப்பக்கமாக இருக்க வேண்டும்.

எமது பொறுப்பாளர்களில் அநேகரைத் தெரியும். சிலரைத் தெரியாது. கிட்டண்ணையை நல்லாகவே தெரியும். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் படிப்பவர்கள் என்று சொல்லி, அவர்தான் எம்மில் இருவருக்கு ஒரு வீட்டில் அறையெடுத்துத் தந்திருந்தார். தினமும் பின்னேரம் வந்து 'கோர்ஸ் ரன்னிங்' செய்யச் சொல்லிவிட்டு வாட்டத் தொடங்கினால் மனுசன், "என்னத்தைச் சொல்ல, வாழ்க்கை வெறுக்கும்." 'வேகம், வேகம் இன்னும் இன்னும்' என்று சொல்லி ஐந்து மணிக்குத் தொடங்கியது ஏழெட்டு மணிக்கு முடியும்போது, அந்தப் பெரிய விறாந்தை நிலம் வியர்வையால் நிரம்பி ஓடும். அதுவரை எதுவும் கதையில்லை. இங்கிலீசும், தமிழுமாய் 'செய், செய்' என்பதுதான், இயலாது என்றால் "அப்ப உனக்கு ரெயினிங் இல்லைப் போ" என்னத்தைக் கதைப்பது. அதற்குப் பிறகுதான் எம்முடன் அன்பாகக் கதைப்பார்.

ரஸ்ய மொழி பெயர்ப்பான 'தாய்' நாவலை முழுமையாகப் படிக்கும்படி தந்திருந்தார். அதுபற்றி கேள்விகள் கேட்பார். 'பாவலின்' நண்பர்களின் பெயர்களைக் கேட்பார். காதலியின் பெயர் கேட்பார். ஆரம்பத்தில் வாசிக்கும்போது பழக்கமின்மையால் கரடுமுரடானதாய்த் தெரியும் 'மொஸ்கோ' மொழி பெயர்ப்பு நூல்களை வாசிப்பதில் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியவர் அவர்தான். இப்படி எமக்கு முன்னரே அறிமுகமாகி இருந்தவர். எமது 'காட்டுப் பயிற்சி முகாமில் இருக்கிறாரா' என்று தேடினால் 'ஆள் வருகிறார் கையில் அகப்பையுடன்' எல்லோரும் நல்லாய்ச் செய்ய வேண்டும் என்றும், தான்தான் இங்கு சமையல் என்றும் குட்டியாய் 'லெக்சர்' அடித்துக் கொண்டு நின்றுவிட்டு, தலைவரைக் கண்டதும் ஓடி ஒழித்தார். பெரிய பொறுப்பாளனாய் அறிமுகமான ஒருவரை எமக்கான சமையல்காரராய்ச் சந்திப்பது நம்பமுடியாத அனுபவமாயும், புதிய பாடமாகவும் அமைந்தது. எமது அந்த முகாமின் சமையல் வேலை என்பது அந்தக் காலத்தில் சுலபமானது அல்ல. குறுகிய காலம் பயிற்சி என்பதால் மிகவும் நெருக்கமான நேர அட்டவணை. உடற்பயிற்சி ஆசிரியர் புலேந்தி அம்மான் போட்டு வாட்டிப்போட்டு விட்டால், அடுத்த சந்தோசம் மாஸ்ரரின் வகுப்பிற்கு இடையில் உள்ள குறுகிய உணவு வேளையில் சமையல் கொட்டிலுக்குப் போவது நடந்து அல்ல. போகும் வேகத்திற்கு அங்கே தடிகளால் கட்டிய சிராம்பியில் உணவு தட்டுகளில் போட்டு மூடிவைத்திருக்கும். கிட்டண்ணையும் ரஞ்சனும் இணைந்து சமையல். மூன்று வேளையும் நேரம் தவறாமல் உணவு கொடுக்க வேண்டும். ஒருநாள் கூட நேரம் தவறியதாகவோ, வேலையில் சினந்ததாகவோ நினைவில் இல்லை. ஆனால் தங்களின் வேலைச் சுமையைக் குறைப்பதற்கான குறும்புகள் இருக்கும். உணவுத் தட்டுக்களில் இலக்கம் இடப்பட்டிருக்கும். தட்டுக்களை இலக்கம் மாறி எடுப்பவர்கள் அன்றைய சமையல் பாத்திரங்களைக் கழுவிக் கொடுக்க வேண்டும். ஆரம்பத்தில் தட்டுக்கள் இலக்க ஒழுங்கில் இருந்தன. பிரச்சனை இல்லை. இடையில் ஒருநாள் எல்லாம் மாறியிருந்தது. யார் பார்த்தது. அன்று நாங்கள் பாத்திரம் கழுவினோம். பார்த்துச் சிரித்தார்கள். ஆனால் பின்னர் நாங்கள் உசாராகிவிட்டோம். ரெஜிக்கு இலக்கம் 6. விக்ரருக்கு இலக்கம் 9. அவர்கள் அடிக்கடி கழுவிக் கொடுத்தார்கள். அவர்கள் சரியாக எடுத்தாலும் இவர்கள் விட்டால் தானே. இப்படி பம்பலும் குறும்புமாய்த்தான். ஆனால் கடமை தவறியதில்லை. சமையலில் அலட்சியம் இருந்ததில்லை.

நீண்ட கால ஓட்டத்தின் பின், ஒரு நாள் தலைவர் கூறுகிறார். "என்ன கடமையாக இருந்தாலும் அதைப் பொறுப்பேற்றுச் செய்ய பின்னிற்கக் கூடாது. கடமையில் உயர்ந்தது, தாழ்ந்தது என்றில்லை. ஆரம்ப காலத்தில் ஒருமுறை எமது புதிய பயிற்சி முகாம் ஒன்றில் எல்லோருக்கும் வேலைகள் பங்கிட்டு நிர்வாகத்தைச் சீர்செய்து கொண்டிருந்த வேளை, கிட்டு தானே முன்வந்து அனைவருக்குமான சமையல் வேலையைப் பொறுப்பெடுத்துச் செய்தார்."

புதிய போராளிகளுக்குத் தலைவர் எடுத்துச் சொல்லும் விடயத்தை அன்று நாங்கள் நேரே கண்டோம். அது எமக்கு போராட்டம் பற்றியும், இயக்கத்தில் நாங்கள் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறை பற்றியும் ஒரு பாடத்தை வித்தியாசமான முறையில் எடுத்துச் சொல்லியது. கிட்டண்ணை வேலைகளைப் பொறுப்பேற்பதிலும் அந்தஸ்தினை, தரத்தினை பார்ப்பது இல்லை. ஆனால் அவர் வேலையை ஒழுங்கு செய்யும் விதமும், செய்து முடிக்கும் பாங்கும் அந்த வேலைக்கு ஒரு அந்தஸ்தினை, உயர்தரத்தினை ஏற்படுத்திவிடும் என்பதே உண்மை.

**தொடர்ச்சி 4ம் பக்கம் ....**